1972 சனவரி 25]

ஆராய்ந்து சில யோசனைகளை இந்தக் குழுவுக்குச் சொல்லியிருக்கிறார்கள். அதை இந்தக் குழுவினர் பரிசிலித்து வருகிறார்கள். அதற்காக அவருக்கு ரெம்யூனரேஷன் ஏதாவது கொடுக்கப்பட்டதா என்கிற விவரம் குறிப்பில் இல்லை.

பகுதி நேர கைத்தொழில் ஆசிரியர்கள்

*** 39 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதும் பணியாற்றும் பகுதி நேர கைத் தொழில் ஆசிரியர்கள் எத்தனை பேர்?

(இ) இவர்களை முழுநேர ஊழியர்களாக நியமனம் செய்யும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 2,206 பேர்.

(இ) இது அரசின் பரிசிலனையில் உள்ளது.

சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரியில் மாலைநேர வகுப்புகள்

*** 40 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரில் உள்ள சிக்கண்ணா அரசினர் கலைக் கல்லூரியில் மாலை நேர வகுப்புகளைத் துவக்கும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதற்கான செயற் குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

படிப்பிற்கிடையே தொழிற்பயிற்சி போதிக்கும் முறை

*** 41 வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள என்ஜினியரிங் கல்லூரிகளிலும் "சாண்ட்விச் படிப்பு முறை" (படிப்புக்கு இடையே தொழிற் பயிற்சி போதிக்கும் முறை) ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், அது எப்போது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 1972-73-ல் ஒன்று அல்லது இரண்டு பொறியியல் கல்லூரிகளில் இப்பயிற்சி ஆரம்பிக்கப்படலாம்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, இந்த சாண்ட்விச் படிப்பு முறையின்படி எத்தனை மணி நேரம் படிப்பு, எத்தனை மணி நேரம் தொழில் பயிற்சி அளிக்கிற திட்டம் இருக்கிறது? தொழிற்

பயிற்சியில் அதிகக் கவனம் செலுத்துவது எதிர்கால வேலைவாய்ப்புக்குப் பயன் அளிக்கக் கூடியதாக இருக்குமல்லவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இதுபற்றிய முழு விவரக் குறிப்பு கிடைக்கவில்லை.

சென்னைப் பல்கலைக் கழகம் இதற்காக ஒரு குழுவை அமைத்து ஆராயும்படி செய்திருக்கிறார்கள். பாலிடெக்னிக்கில் இந்த முறை நல்ல பலன் அளிக்கக் கூடியதாக இருப்பதால் பொறியியல் கல்லூரியிலும் மேலைநாடுகளில் உள்ளதுபோல இந்த முறையை நன்கு பரிசீலித்து நடைமுறைக்குக் கொண்டுவந்தால் பயன் உள்ளதாக இருக்கும் என்றே கருதப்படுகிறது. 1972-73-லாவது ஒன்றிரண்டு கல்லூரிகளில் இதைப் பரீட்சார்த்தமாகக் கொண்டு வரும் வகையில் இதுபற்றி இந்தக் குழுவினர் பரிசீலனை செய்வார்கள் என்று நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தையும் இந்தக் குழுவினர் கவனத்தில் எடுத்துக் கொள்வார்கள்.

Teaching of Telugu in schools in Rajapalayam

* 42 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any representation has been made by the Hon. Sri Subba Raja, a former Member of this House on the teaching of Telugu in Rajapalayam Educational Institutions about 10th April 1970; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) பகுதி நேர தெலுங்கு பண்டிதர் ஒருவரை எஸ்.எஸ். அரசு (கழக) உயர்நிலைப்பள்ளியில் நியமித்துக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, there are about 350 students who want to study Telugu in the High School at Rajapalayam. Before the introduction of the two-language scheme, they were getting tuition in Telugu in addition to Tamil during the school hours. I have made representation with regard to this matter, and also Thiru Subba Raja, a former Member of this House and the Chairman of the Rajapalayam Municipality. The qualified Telugu teacher was then transferred to some other work and has not been re-posted here. Now arrangements have been made it is said to teach Telugu after school hours and only a salary of Rs. 30 has been fixed for a Telugu Pandit. How can a Telugu Pandit work for Rs. 30? I have also received a letter that the Telugu Pandit has to retire in the month of July or so. So, may I request the Hon. Minister for Education whether he will take steps to transfer the Telugu Pandit to that school with reasonable pay and provide for the teaching of Telugu there?